அம்பத்துார் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

RLTOP: 14/2022

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 13-ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| ம.சா.1 | 13.03.2026 |
| பெயர் லட்சுமி | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>(மனுவின் பெயரில் திருப்பி அழைக்கப்பட்டு)குறுக்கு விசாரணை</u>:-

1. மனுசொத்தின் பரப்பளவு எனக்கு தெரியாது. யாருக்கு எதிராக மனுதாக்கல் செய்துள்ளேன் என்றால் பெயர் சரியாக தெரியாது. மனுசொத்து யாருக்கு உரிமையானது என்றால் எனக்கு உரிமையானது. எவ்வாறு எனக்கு உரிமையானது என்றால் என் கணவருக்கு பவர் மூலம் கிடைக்கப்பெற்ற சொத்தை எனக்கு கொடுத்துவிட்டார். செட்டில்மென்ட் மூலமாகவா அல்லது கிரையம் மூலமாகவா என்று எனக்கு தெரியாது. என் கணவருக்கு தான் முழுவிவரங்கள் தெரியும். எவ்வளவு கிரையதொகை கொடுத்து கிரையம் பெற்றேன் என்றால் குறிப்பிட்டு தெரியாது சுமார் ரூ60 முதல் 70 லட்சம் இருக்கும்.

2. ம.சா.ஆ 2 கிரையஆவணத்தின் படி நான் சுவாதினம் எடுத்துவிட்டதாக

குறிப்பு உள்ளது என்றாலும் அன்றைய தேதியே நான் சுவாதினம் எடுத்துவிட்டேனா என்றால் மல்லிகா என்பவரின் மகள் ரேவதி மனுசொத்தில் குடியிருப்பதால் என்னால் சுவாதினம் எடுக்கமுடியவில்லை. எனவே தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கிரையம் கொடுத்தவர்கள் சொத்தை காலிசெய்து தரவில்லை என்று வேறு நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுத்தேன். பலமுறை கேட்டுப்பார்த்தேன்.

3. மல்லிகா என்பவர் எதற்காக என் கணவருக்கு பவர் கொடுத்தார் என்றால் தெரியாது. மல்லிகா குடும்பத்திற்கு எனது கணவர் கடன் கொடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது. 2020 கிரையம் பெற்ற காலத்தில் எனக்கு மல்லிகா என்பவரை தெரியும். அந்த காலத்தில்எனது கணவர் மல்லிகாவிற்கு பணம் கொடுத்துவிட்டார் என்ற விவரம் தெரியுமா என்றால் என் கணவருக்கு தான் தெரியும். கிரையஆவணத்தில் நான் 21.02.2020 அன்று சுவாதினம் எடுத்துவிட்டது உண்மையா அல்லது மனுவில் உள்ள படி ரேவதி என்பவர் 2 மாதத்தில் வீட்டை காலிசெய்து தருவதாக சொன்னது உண்மையா என்றால் மனுவில் சொன்னது தான் சரி. ரேவதி காலிசெய்யாததால் மேற்கூறிய 2 மாதங்கள் கழித்து நடவடிக்கை எடுத்தேனா என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்துவிட்டேன்.

4. மல்லிகா என்பவர் கொடுத்த பவரை எனது கணவர் தவறாக பயன்படுத்தி நானும் என் கணவரும் அதனை பயன்படுத்தி என்பெயரில் கிரையம் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. அது குற்ற செயல் என்றாலும் அதற்காக மல்லிகா என்பவர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து இந்த வழக்கு நிலுவையில் இருப்பதை சுட்டிகாட்டிவிட்டார்கள் என்றால் என் கணவருக்கு தான் தெரியும். ம.சா.ஆ 2 கிரையஆவணம் சம்மந்தமாக பூந்தமல்லி நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால்

தெரியாது. எனவே இந்த வழக்கு மூலம் எனக்கு பரிகாரம கிடைக்கக்கூடியது அல்ல என்றாலும் பூந்தமல்லி நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கில் தான் நிவாரணம் கிடைக்கும் என்றாலும் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.